
# இல்லத்து வழக்காடு



Gafso
A Partner in need.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இல்லத்து

## வழக்காடு

GAFSO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

உலகம் தோன்றிய காலம் முதல் மனிதர்களுக்கிடையிலான முரண்பாடு, வன்முறை. இன்று வரை நடைபெற்ற வன்னமே உள்ளது. அது நாகரீகம் அடைந்து வரும் நிலையில் மனிதர்களுக்கு தேவையான சட்டங்களும் அதற்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. சட்டங்கள் பொதுவாக சிவில் சட்டம் மற்றும் குற்றவியல் சட்டம் என இரு பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இவ்வாறான சட்ட திட்டங்கள் மனிதர்களுடைய பிணக்குகளை தீர்க்கும் வகையில் அமைந்திருந்த போதிலும் அவை தொடர்பான அறிவினை பொது மக்கள் பெற்றிருப்பது மிகக்குறைவாக காணப்படுகின்றது.

அதிலும் குறிப்பாக பெண்களுக்கெதிராக நடாத்தப்படும் வன்முறைகள் சம்பந்தமான சட்ட திட்டங்களை எம் மத்தியிலுள்ள மக்கள் அறிந்திருப்பது மிக குறைவாக காணப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் இதனை முடியுமான வரை மக்கள் மயப்படுத்துவது இக்காலப்பகுதியில் மிக அத்தியாவசியமான ஒரு விடயமாகும்.

அந்த வகையில் இதற்காக அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், மற்றும் பொதுமக்கள் முன்வர வேண்டிய தேவை நமக்கு எழுந்துள்ளது. இதனை கருத்திற்கொண்டு GAFSO நிறுவனமானது மக்கள் அறிந்திருக்க வேண்டிய வீட்டு வன்முறை மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறை சம்பந்தப்பட்ட அடிப்படை சட்டங்களை ஒரு நூலாக தொகுத்துள்ளது. இந் நூலுக்கான உள்ளீட்டை வழங்கிய சட்டத்தரணி N.M.அப்துல் முஜீப் LLB, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர ஜெனித்தா மற்றும் இதற்காக உழைத்த அனைவருக்கும் நாம் நன்றியை தெரிவித்து கொள்கின்றோம். மேலும் இவ்வாறான பயன்தரக்கூடிய விடயங்களை துறைசார் வல்லுனர்கள் வெளியீடுவது காலத்தின் தேவையாகும்.

திரு. A.J. காமில் இம்டாட்,
திட்டப் பணிப்பாளர், GAFSO.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SGBV திட்டம் தொடர்பாக ...

ஆசிய நிலையத்தின் அனுசரணையுடன் GAFSO அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தி வரும் Responding to Sexual gender based violence [SGBV] எனும் திட்டமானது கடந்த 2019ம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டமானது 11 பிரதேச செயலகங்கள் உட்பட 4 பொலிஸ் நிலையம் ஊடாக அம்பாறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் பிரதான நோக்கங்களாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள பெண்களுக்கெதிரான வன்முறைகள் மற்றும் அது சார் விடயங்களை இல்லாமல் செய்வதற்கு அல்லது குறைப்பதற்கு மேற்குறிப்பிடப்பட்ட இரு அரச நிறுவனங்களுடன் இணைந்து பிரச்சினைகளுக்கான தீர்வினை எட்டும் வகையிலான சேவைகளை வழங்குவது எமது திட்டத்தின் பிரதான குறிக்கோளாக அமைகின்றது.

இதன் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களின் பெண்களுக்கான ஒரு சிறந்த, பாதுகாப்பான சூழலை கட்டியெழுப்பும் பொருட்டு அரச நிறுவனங்களுடன் இணைந்து விழிப்புணர்வு நிகழ்வுகள், துண்டுப்பிரசுரங்கள், விழிப்புணர்வு காணொளிகள் மற்றும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மற்றும் வழிமுறைகளை கலந்துரையாடல் போன்றவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்த வகையில் இதன் ஒரு அங்கமாக இக்கையேடு மக்களின் அறிவினை விருத்தி செய்யும் பொருட்டு அச்சிட்டு வழங்கப்படுகின்றது.

திரு. A.J. காமில் இம்டாட்
திட்டப் பணிப்பாளர், GAFSO.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம் ...


1. பெண்ணுரிமைகளும் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் ................ 07
2. வன் கொடுமையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு இலங்கையின் சட்ட அமைப்பு எவ்வாறு உதவ முடியும் ................ 12
3. தனியார் அல்லது நிறுவன ரீதியாக பெண்கள் உதவியை நாடும் சந்தர்பங்கள் ................ 13
4. பாலியல் துன்புறுத்தல் ................ 14
5. வீட்டு வன்முறைகளைத் தடுப்பதற்கான சட்டம் ஒரு நோக்கு ................ 15





GAFSO


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட அறிமுகம் - Introduction Of Law

சட்டம் என்னும் போது அதற்கு பல்வேறுபட்ட வரைவிலங்கணங்களும் கூற்றுக்களும் சட்ட எழுத்தாளர்களாலும் அறிஞர்களாலும் வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் சட்டம் என்னும் போது ஒரு சமூகத்தை ஒழுங்கமைக்கின்ற ஒழுங்கு விதிகளின் தொகுப்பு என பொதுவாக கருதலாம். மேலும் சட்டம் என்னும் போது அதற்கு இயற்கையான பண்புகள் காணப்படுகின்றன.

சட்டத்தினுடைய நோக்கம் சிறந்த ஒரு சமுதாயம் ஒன்றை உருவாக்குவதும் ஒழுக்கமுடைய பிரஜைகளை உருவாக்குவதுமாகும்.

### சட்டம் என்பது :

பண்பாடுடைய ஒரு சமூகத்தின் வாழ்வுக்கும் சமூகத்திற்குமிடையில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு மிகவும் உதவுகின்ற விதிமுறைகளாகும்.

### சட்டம் உருவாக்கம் :

ஆரம்ப கால மக்கள் சமய, பண்பாட்டு சட்டங்களால் ஆளப்பட்டனர். காலப்போக்கில் இவை வேறூன்றியதன் காரணமாக சட்டமாக உருவானது.

### இலங்கையிலுள்ள சட்டங்கள் :

1. அரசியல் அமைப்புச்சட்டம்
2. குடியியல் சட்டம்
3. குற்றவியல் சட்டம்




இவை தவிர விசேட சட்டங்களாக,

### முஸ்லிம் சட்டம் :

இலங்கையிலுள்ள அனைத்து முஸ்லிம்களும் இச்சட்டத்தால் ஆளாக்கப்படுகின்றனர். இதனால் இதனை ஆள்சார் சட்டம் என அழைப்பர்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**கண்டியச்சட்டம் :**

கண்டியில் வாழும் சிங்களவருக்கு மட்டும் உரித்தானதானது. இதனால் இதனை இடம்சார் சட்டம் என அழைப்பர்.

**தேச வழமைச்சட்டம் :**

யாழ்ப்பாண மக்களுக்கு இச்சட்டம் உரித்தானதால் இதனையும் இடம்சார் சட்டம் என அழைப்பர்.

- இலங்கை ஜனநாயக சோசலிக்க குடியரசின் அதியுயர் அடிப்படைச் சட்டமாக தற்போது நடைமுறையிலுள்ள 1978ம் ஆண்டின் ஜனநாயக சோசலிச குடியரசின் 02ஆவது அரசியல் அமைப்பு காணப்படுகிறது.

- இதற்கு முன்னர் 1946ஆம் ஆண்டய சோல்பரி அரசியல் அமைப்பும், 1977ஆம் ஆண்டு மே 22ம் திகதி உருவாக்கப்பட்ட 1வது அரசியல் அமைப்பும் காணப்பட்டது.

- 02வது அரசியல் அமைப்பு 1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

- 1988ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03ம் திகதி ஆக்கப்பட்ட 13வது சீர்திருத்தம் மற்றும் 2001ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ம் திகதி ஆக்கப்பட்ட 17வது சீர்திருத்தம் என்பன முக்கியமான திருத்தங்களாகும்.

இலங்கையின் அரசியல் அமைப்புக்கு மேலதிகமாக இரு சட்ட ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

1.பொதுச் சட்ட ஏற்பாடு
2.தனியார் சட்ட ஏற்பாடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிப்படை மனித உரிமைகள்

- மனித உரிமைகள் என்பது

  மனிதன் தான் வாழும் சமூகத்தில் சுதந்திரமாகவும் வாழ்வதற்கு அவர்களுக்கு தேவையான உரிமைகள் அனைத்தும் மனித உரிமைகளாகும்.

- மனித உரிமைகளின் முக்கியத்துவம்

  1948ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பிரகடனமொன்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் உருவாக்கப்பட்து. இதன் மூலமே மனித உரிமைகள் என்ற வாசகம் உருவாக்கப்பட்டது.

- மனித உரிமைகள் பிரகடனம் இலங்கைக்கு ஏற்புடையதா?

  ஆம், இந்த சமுதாயத்தில் கையெழுத்திட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பதால் அது ஏற்புடையது. 1978ம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம் இப்பிரகடனத்தின் அடிப்படை விடயங்கள் இலங்கையில் உள்வாங்கப்பட்டது.

- அடிப்படை உரிமை என்பது,

  மனிதன் உயிர் வாழ்வதற்கும், சமூகத்தில் அவன் உரிமையுடன் உலாவுவதற்கும் தேவையான உரிமைகளாம்.

  உணவு உடை, உறையுள் உட்பட சிந்திக்கும் உரிமை, சமய, மொழி, சாதி, பால், இனம் என்பவை ரீதியாக பாகுபடுத்தப்படாமல் இருப்பதற்கான உரிமைபோன்றவைகளை உதாரணமாக கூறலாம்.

- தேசிய சுகாதார, தேசிய பாதுகாப்பு போன்ற காரணங்களுக்கான இவ்வடிப்படை உரிமைகள் மட்டுப்படுத்தப்படும் என அரசியல் அமைப்புச் சட்டத்தின் 15ம் விதியில் கூறப்பட்டுள்ளது.

ஆடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்ட 30 நாட்களுக்குள் உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம் அல்லது மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்ய வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணுரிமைகளும் பெண்களுக்கெதிரான வன்முறைகளும்

பெண்கள் எனும்போது ஒரு ஒடுக்கப்பட்ட இனமாக இன்றைய முன்னேற்றமான உலகமும் கருதிற்கொண்டிருக்கும் நிலையில் பெண்களின் உரிமைகள் பற்றி சகலரும் பூரண அறிவைப் பெற்றிருத்தல் அவசியமாகின்றது.

ஆண்களும் பெண்களும் உடலியல் ரீதியாக சில இயல்புகளில் வேறுபட்டிருந்தபோதிலும் உரிமைகள் எனும்போது ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமைகளே காணப்படுகின்றன. இருப்பினும் ஆண்டாண்டு காலமாய் ஆண்களின் ஆளுகைக்குட்பட்டிருந்த இனமாக பெண்ணினம் இருந்து வந்த காரணத்தினால் அவர்கள் தங்களுக்கிருந்த உரிமைகளைப் பற்றி அறிந்திருக்கவுமில்லை அனுபவித்திருக்கவுமில்லை. அன்றிருந்த சமுதாயத்தில் பெண்ணானவள் அடுப்பங்கரைக்கும் படுக்கையறைக்கும் உரித்தானவளாகவே கருதப்பட்டாள். வெளியுலகைப் பார்க்கும் சந்தர்ப்பம் அவளுக்கு இருக்கவில்லை. தனது பாதுகாவலனாக அமைந்த ஆண்மகன் (தந்தை, கணவன், சகோதரன் ...) கூறுபவற்றையே சரியென ஏற்றுக்கொண்டு செயற்படும் நிலைமையிருந்தது.

அன்றிருந்த கீழைத்தேய சமுதாயத்தில் வாழ்ந்த பெண்களுக்கு கல்விகற்கச் சந்தர்ப்பமிருக்கவில்லை மேற்கத்தேய நாடுகளில் வாழ்ந்த பெண்கள் சமுதாயம் சற்று நாகரீகமடைந்திருந்ததனால் அவர்கள் கல்வி கற்க தலைப்பட்டனர். தங்களுக்கிருக்கும் உரிமைகளைப்பற்றி அப்பெண்கள் கதைக்கத் தலைப்பட்டதன் காரணமாக பெண்களின் உரிமைகள் வெளிக்காட்டப்பட்டன.

இவ்வாறான மேலைத்தேய பெண்களின் எழுச்சியின் காரணமாக சர்வதேச சமுகம் பெண்களின் உரிமைகளை அங்கீகரித்து அமுல்படுத்தத்தொடங்கின. மேற்கத்தேய நாடுகளில் ஏற்பட்ட இம்மாற்றங்கள் படிப்படியாக கீழைத்தேய நாடுகளினையும் ஆக்கிரமிக்கத் தொடங்கின. இதன் விளைவாக பெண்களின் உரிமைகள் அனேகமான நாடுகளின் சட்டங்களில் இடம் பிடிக்கத் தொடங்கின.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான முன்னேற்றங்களை அவதானித்த ஐக்கிய நாடுகள் சபையானது 1979ம் ஆண்டில் பெண்களுக்கெதிரான பேதங்காட்டலின் அனைத்து வடிவங்களையும் ஒழித்தல்சார் இணக்க உடன்படிக்கையை உருவாக்கியது. இவ்வுடன்படிக்கையானது பெண்களுக்கான உரிமைகளின் சர்வதேச சட்டமாகப் பெரும்பாலும் வர்ணிக்கப்படுகின்றது. முகப்புரையொன்றையும் 30 உறுப்புரைகளையும் கொண்டுள்ள இவ் ஆவணமானது 1981ம் ஆண்டில் பிரயோகத்திற்கு கொண்டு வரப்பட்டு 1996ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் 152 உறுப்பு அரசுகளால் வலுவாக்கம் செய்து கொள்ளப்பட்டது.

இவ்விணக்க உடன்படிக்கையை அங்கீகரிப்பதன் மூலம் ஒவ்வொரு அரசும் பின்வரும் செயற்பாடுகள் மூலம் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்க முடியும்.

1. தமது சட்ட முறைமையில் ஆண், பெண் சமத்துவக் கோட்பாட்டை இணைத்துக் கொள்ளல், பேதங்காட்டும் அனைத்துச் சட்டங்களையும் நீக்கி பேதங்காட்டலைத் தடைசெய்யும் பொருத்தமான சட்டங்களை ஏற்றுக் கொள்ளுதல்.

2. பேதங்காட்டலுக்கு எதிராக பெண்களின் பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு நியாய சபைகளையும் பிற நிறுவாகங்களையும் ஸ்தாபித்தல்.

3. தனியாட்கள் அமைப்புக்கள் என்பவற்றால் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பேதங்காட்டல்களைத் தடைசெய்தல்.

ஆண்களைப் போன்று பெண்களிற்கும் கல்வி தொழில் என்பவற்றுடன் வாக்களிப்பதற்கான உரிமை தேர்தலில் நிற்றலுக்கான உரிமை உட்பட அரசியல் வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் பெண்களுக்குச் சமமான அணுகுதல் வழிகளையும் சமமான வாய்ப்புகளையும் உறுதி செய்வதன் மூலம் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் சமத்துவம் அனுபவபூர்வமாக உணரப்படுவதற்கான உரிமையை இவ்வுடன்படிக்கை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

மேலும் இவ்வுடன்படிக்கையானது பெண்களுக்கு ஆதனங்களை வைத்திருப்பதற்கான உரிமை, விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கான உரிமை திருமணம் செய்யும் உரிமை போன்ற இன்னோரன்ன உரிமைகளும் உள்ளதாக வலியுறுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையைப் பொறுத்தவரையில் பெண்களின் உரிமைகளை வலியுறுத்துவனவாக பல சட்ட ஏற்பாடுகள் உள்ளன. இலங்கையின் அதியுயர் சட்டமான அரசியலமைப்புச் சட்டத்தில் சட்டத்தின் முன்பு சகலரும் சமம் என்று குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் மேற்படி சட்டத்தின் உறுப்புரை 12(4) ஆனது சட்டத்தின் முன்பு சகலரும் சமம் என்ற ஏற்பாட்டினை பெண்களின் முன்னேற்றத்துக்காக சட்டத்தின் மூலம் துணை நிலைச் சட்ட வாக்கத்தின் மூலம் அல்லது ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் சிறப்பேற்பாடு செய்வதானது மீறாது. பெண்களை வேலைக்கமர்த்துவது தொடர்பான சட்டம் (maternity benefits Act) போன்றன பெண்கள் தொடர்பான விசேட சட்டங்களில் குறிப்பிடத்தக்கன.

பெண்களின் உரிமைகள் மீறப்படுகின்றபோது அவை வன்முறைகளாகப் பரிணாமிக்கின்றன. பெண்களின் மீதான வன்முறை என்று கூறுகின்ற போது அவர்களின் மீதான ஒரு வகையான தாக்குதல் எனலாம். இத்தகைய வன்முறைகள் மனித உரிமைகளை மீறும் ஒரு செயலாகும்.



**இத்தகைய வன்முறைகள்**

1. உடல் ரீதியிலான வன்முறை
2. பாலியல் ரீதியிலான வன்முறை
3. உள ரீதியிலான வன்முறை
4. பொருளாதார ரீதியிலான வன்முறை
5. கலாச்சார ரீதியிலான வன்முறை என்று பல வகைப்படும்.

உடல் ரீதியிலான வன்முறை என்று கூறுகின்ற போது அடித்தல், காயங்களை ஏற்படுத்தல், கொலை முயற்சி, குற்ற முறையான தடுத்துவைப்பு, ஆட்கடத்தல், அடிமை வியாபாரம், போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

பாலியல் வன்முறைகள் எனும்போது பாலியல் வல்லுறவு, பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் சுரண்டல் போன்றவற்றைக் குறிப்பிட முடியும். உளவியல் ரீதியிலான வன்முறைகளுள் ஏசுதல் அவமானப்படுத்தல் என்பன உள்ளடக்கப்படும்.

பொருளாதார ரீதியிலான வன்முறை எனும் போது உதாரணமாக வீட்டின் பொருளாதார ஆதிக்கத்தை தன்னகத்தே தக்க வைத்துக் கொண்டு ஆண்கள் தாமே கையாள்வதை கொள்ள முடியும்.
கலாச்சார ரீதியான வன்முறை எனும் போது எமது சமூகங்களில் நடைபெறும் அனேக விடயங்களைக் கூற முடியும். சிறு வயது திருமணம், பெண் சிசுக்களைக் கொலை செய்தல், பெண்களைத் தலைமைத்துவத்திற்கு வராமல் தடை செய்தல் போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய வன்முறைகளை எடுத்து நோக்குகின்ற போது அவை ஏற்படுத்தும் விளைவுகள் மிகவும் பாரதூரமானவை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்படுபவர்களுக்கு மிகக் கடுமையான மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது. அவை இறுதியில் மனச்சோர்வு, கோபம், அச்சம் போன்றவை ஏற்பட வழி வகுக்கின்றது. அத்துடன் உடல் ரீதியிலான பாதிப்பிற்கு உட்படுபவர்கள் அக்காயங்களின் மூலம் தொற்றுகளுக்குட்பட்டு அவை நீண்ட காலத் தாக்கங்களை ஏற்படுத்தும். இவற்றிற்கு மேலதிகமாக தாக்கத்திற்கு உட்படும் வேளைகளில் மரணம் ஏற்படவும் வாய்ப்புகளுண்டு. மற்றும் பாலியல் வல்லுறவிற்கு உட்பட்ட நபர் கருவுறும் சந்தர்ப்பத்தில் பாதுகாப்பற்ற கருக்கலைப்பில் ஈடுபடுகையில் அதுவும் உயிராபத்தை உண்டுபண்ணுவதோடு இனப்பெருக்க நோய்களையும் ஏற்படுத்தக் கூடும். வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களை சமூகமும் ஏதோ ஒரு விதத்தில் ஒதுக்கியே நடக்கும்.

பெண்கள் மீதான வன்முறைகள் இன்று அதிகளவில் வீடுகளில் நடைபெறுகின்ற போதிலும் வீதிகளிலும் போக்குவரத்து சாதனங்களிலும் பொது இடங்களிலும் அலுவலகங்களிலும் வன்முறைகள் இடம்பெறத்தான் செய்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் பாலியல் வல்லுறவுக் குற்றம் மற்றும் உடல் ரீதியான தாக்குதல்களுக்கான தண்டனைகளை இலங்கைத் தண்டனைச் சட்டக்கோவை கொண்டுள்ளது. அச்சட்டத்தின் 314, 315, 317, 300 போன்ற பிரிவுகள் காயமேற்படுத்தல், கொலை முயற்சி போன்றவற்றிற்கான தண்டனைகளைக் கொண்டுள்ளது. அதே போன்று பிரிவு 364, 365 போன்றன பாலியல் வல்லுறவு தொடர்பிலான ஏற்பாடுகளாகும்.

இருப்பினும் இலங்கையில் புதிதாகக் கொண்டு வரப்பட்டுள்ள சட்டமான வீட்டு வன்முறைச் சட்டமானது வேறு விதமான நிவாரணத்தை வீட்டு வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குகின்றது. அதாவது உடல் ரீதியாக அல்லது உளவியல் ரீதியான வன்முறைக்கு உறவினர் ஒருவரினால் வீட்டுச் சூழலில் ஒருவர் உட்படுத்தப்படுகையில் அல்லது உட்படுத்தப்படப் போகையில் அப்பாதிக்கப்பட்ட நபர் அவர் வசிக்கும் பிரதேசத்திலுள்ள நீதவான் நீதிமன்றத்தினை நாடி குறித்த நபருக்கெதிராக பாதுகாப்புக் கட்டளையொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும். அப்பாதுகாப்புக் கட்டளையானது குறித்த பாதிப்பையேற்படுத்தும் நபரை குறித்த வீட்டுச் சூழலுக்கு, பாதிக்கப்பட்ட நபர் நடமாடும் இடங்களுக்குச் செல்வதினின்றும் தடை செய்யும்.

குறித்த நபருக்கெதிராகப் பாதுகாப்புக் கட்டளையொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும். அப்பாதுகாப்புக் கட்டளையானது குறித்த பாதிப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தும் நபரை குறித்த வீட்டுச் சூழலுக்கு பாதிக்கப்பட்ட நபர் நடமாடும் இடங்களுக்குச் செல்வதினின்றும் தடை செய்யும்.

இவ்வாறான சட்ட ஏற்பாடுகள் இருந்தபோதிலும் இவ்வன்முறைகளால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமாக இருக்கும் காரணத்தினால் அவை ஏற்படாமல் தடுப்பது சிறந்தது எனலாம். ஏனெனில் இவ்வன்முறைகள் மக்களின் மனப்பாங்கிலிருந்து தோன்றும் ஒரு விடயமாக இருக்கின்றது. பெண்களிலும் பார்க்க ஆண்களுக்கு அதிக மதிப்பளிக்கும் சமூகங்களிலும் முடிவுகளை எடுக்கும் செயற்பாட்டில் பெண்களின் பங்கேற்பினை தடுக்கும் சமூகங்களிலும் ஆண்களுடன் ஒப்பிடும்பொழுது பெண்களுக்கு குறைந்தளவிலான உரிமைகளை வழங்கும் சமூகங்களிலும் இத்தகைய சம்பவங்கள் பெருமளவிற்கு இடம்பெற முடியும்.

எனினும் ஆண்கள் அனுபவிக்கும் அதே உரிமைகளையும் மதிப்பையும் அந்தஸ்த்தையும் பெண்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் விதத்தில் இந்த மனப் பாங்குகளில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரக் கூடியதாக இருக்குமானால் பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்களை பார்த்துக் கொண்டிராத சமூகமொன்று உருவாகும். இவ்வாறான ஒரு நிலமைய உருவாகுவதே பெண்கள் மீதான வன்முறையைத் தடுப்பதற்கான ஒரு சிறப்பான அம்சமாகும். அவ்வாறான நிலமையை ஏற்படுத்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பயிற்சிப் பட்டறைகள், சமூகக் கலந்துரையாடல்கள் போன்றவற்றை மேற்கொள்வதன் மூலம் வெற்றிபெறக் கூடியதாக இருக்கும்.

எமது சமுதாயத்தைப் பொறுத்தவரையில் குடும்பக்கட்டமைப்பு மிகவும் அத்தியவசியமாகின்றது. அதனைப் பேணுவதில் பெருமளவில் பங்களிப்பவர்கள் "பெண்கள்தான் வீட்டின் கண்கள்" எனவே பெண்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பது அவர்களுக்குச் சிறப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் போதுதான் நாம் வாழுகின்ற சமுதாயத்தில் சமுக நிலை நிலவும் என்று கூறினால் மிகையாகாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன் கொடுமையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு இலங்கையின் சட்ட அமைப்பு எவ்வாறு உதவ முடியும்.

- உலகில் எங்கிலுமுள்ள பெண்கள் மாபெரும் விகிதாசாரத்தை கொண்ட ஒரு பிரச்சினைக்காக போராடிக்கொாண்டு இருக்கின்றார்கள். அவர்கள் மீது பிரயோகிக்கப்படும் வன்முறையே இப்பிரச்சினையாகும். இலங்கையிலும்

### உள்ளக வன்முறை

- இலங்கையில் குடும்ப விடயங்கள் அதிகமாக மூடி பாதுகாக்கப்படுவதுடன் தனிப்பட்ட ரீதியில் பேணப்படுகின்றனர். இது நாம் கடைபிடித்து வரும் நம்பிக்கையாக இருப்பினும் இது பாரிய சமூக பிரச்சினைக்கு பங்களிக்கின்றது இதுவே உள்ளக வன்முறை எனப்படும்.

  இவ் உள்ளக வன்முறை பிரச்சினை மிகவும் பரவலாக பெண்கள் மற்றும் சிறுவர்களை பாதிக்கின்றது. சமூகமானது குடும்பங்கள் தமது பிரச்சினைகளை மூடி மறைத்தலை உறுதிப்படுத்துவதானது பெண்கள் மற்றும் சிறுவர்களை பிரச்சினைகளுக்கு ஆளாக்குகின்றது.

- மக்கள் தொகை கணக்கெடுப்பில் மற்றும் புள்ளிவிவரத் துறையினால் 2016ம் ஆண்டில் நடாத்தப்பட்ட ஒரு ஆய்வுக்கமைய 17வீதமான பெண்கள் அவர்களின் நெருங்கிய துணையால் உள்ளக வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர். ஆய்வுகளின் அடிப்படையில் உள்ளக வன்முறைக்கு ஆளானதாக பதிலளித்தவர்களில் 20வீதம் நகர்புறத்தை சேர்ந்தவர்கள் என்பதுடன். 16 வீதம் கிராமபுறத்தையும் 17 வீதம் தோட்டப்புறத்தையும் சேர்ந்தவர்கள் ஆவார்.

- பெண்கள் அமைப்புக்களின் பலவருட பயற்சிக்கு பிறகு உள்ளக கொடுமைகளை தடுத்து பாதுகாப்பு வழங்கும் நோக்குடன் 2005ம் ஆண்டில் உள்ளக வன்முறை தடுப்புச்சட்டம் அமுலாக்கப்பட்டது.

- இந்த சட்டத்தின் 23ம் பிரிவின்படி உள்ளக வன்முறை என்பது உயிரைப் பாதிக்கும் செயல்கள் காயம் ஏற்படுத்துதல், தவறான கட்டுப்படுத்தல் மற்றும் சிறைப்படுத்தல், குற்றவியல் பிரயோகம் மற்றும் தாக்குதல், கடத்தல், பலாத்காரம் மற்றும் அடிமையாக்குதல், வன்புணர்வு என்ற அனைத்து நடவடிக்கைகளும் ஆகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் அல்லது நிறுவன ரீதியாக பெண்கள் உதவியை நாடும் சந்தர்ப்பங்கள்

ஆய்வின் படி பின்வரும் விகிதாசார அடிப்படையில் பெண்கள் தமக்கெதிரான துன்புறுத்தல்கள்/வன்முறைகள் ஏற்படும் போது பின்வரும் நபர்களிடம் /நிறுவனங்களிடம் தங்களது நாட்டத்தினை செலுத்துகின்றனர்.

| Parents / Brother / Sisters / Relations | Friends / Neighbors | Public Health officer/ Midwife | Police | Government Institutions (Except Police ) | Government Organizations | Other |
|---|---|---|---|---|---|---|
| 74.7 | 27.1 | 7.4 | 18 | 1.4 | 0.4 | 2.9 |








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பாலியல் துன்புறுத்தல்

- UNFPA ஆய்வின் பிரகாரம், பொதுபோக்குவரத்தின் போது 90 வீதம் பெண்கள் ஏதோவொரு விதத்திலான பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர். இது குறிப்பிடப்பட்ட இடத்தில் அல்லது குறித்த காலத்தில் இடம்பெற்றதாக சொல்லமுடியாமை துரதிஷ்டவசமானதாகும்.

- பாலியல் துன்புறுத்தல்களாவன அலுவலக சூழலிருந்து பொது கழிப்பறை வரை மற்றும் வைத்தியசாலைகளிலும் கூட எந்தவொரு இடத்திலும் இடம்பெறலாம். பாலியல் துன்புறுத்தலுக்கென குறிப்பிட்ட குறியீடு ஏதும் இல்லை என்பதுடன் யாராயினும் இதில் எளிதாக பாதிக்கப்படலாம் என்பதால், இது இலகுவாக எடுத்துக்கொள்ள கூடிய ஒரு பிரச்சினை அல்ல.

- பாதிக்கப்பட்டவரின் நிலையை கருத்திற்கொள்ளாது, ஒப்புதலற்ற பாலியல் இடைத்தொடர்பை மேற்கொள்ளும் செயலோ வன்புணர்வு ஆகும். பாதிக்கப்பட்டவரின் ஒப்புதலுடன் அல்லாது ஒப்புதல் அழிக்காது இடம்பெறின் அது தண்டனைச்சட்டத்தின் 363ம் பிரிவின் கீழ் வன்புணர்வு ஆகும்.

- பதிவு செய்யப்பட்ட சம்பவங்களில் பெரும்பாலானவை பெண்கள் என்பதுடன், காவல்துறையினர் வெளியீட்டின்படி இலங்கையில் 2015ல் பதிவான சம்பவங்களில் 80வீதம் 16 வயதுக்கு கீழ்பட்ட சிறுமிகள் என்பது குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டு வன்முறைகளைத் தடுப்பதற்கான சட்டம் ஒரு நோக்கு

1.வீடுகளில் நடைபெறும் வன்முறைகளில் அதிகம் பாதிக்கப்படும் தரப்பினர் யார்?

- வீடுகளில் நடைபெறும் வன்முறைகளில் அதிகளவு பாதிக்கப்படும் தரப்பினர் பெண்களாகவே உள்ளனர்.பெண்கள் மீதான உடலியல் ரீதியான,உளவியல் ரீதியான,பொருளாதார கலாச்சார ரீதியான வன்முறைகள் உலகளாவிய ரீதியில் அதிகரித்துக் கொண்டும் அதேவேளை அவற்றை ஒழிப்பதற்கான முயற்சிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் இலங்கையில் வீட்டு வன்முறைகளைத் தடுப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் இல்லாமை ஒரு பாரிய குறைபாடாகவே இருந்து வந்தது.

2.இச் சட்டத்தினால் வீடுகளுக்குள் நடைபெறும் வன்முறைகள் நிவர்திக்கப்பட்டுள்ளதா?

- இக்குறைபாட்டை நிவர்த்திக்கும் முகமாக இலங்கைப் பாராளுமன்றம் 34ம் இலக்க வீட்டுவன்முறைகளைத் தடுப்பதற்கான சட்டத்தை 2005ம் ஆண்டில் இயற்றியுள்ளது. இச்சட்டத்தின் முகவுரையானது எத்தகைய வீட்டு வன்முறைகளையும் தடுப்பதற்கான சட்டம் என ஏற்பாடு செய்கின்றது.

3.இச் சட்டமானது எவ்வகையான வன்முறைகளைத் தடுக்கின்றது?

- இச்சட்டத்தில் வீட்டு வன்முறை என்றால் உடல் ரீதியான வன்முறைகள்,((உ.ம்) தண்டனைச் சட்டக் கோவையின் குற்றங்களான ஆட்கொலை, கொலை, கொலை முயற்சி,கொலைச்சதி,அச்சுறுத்தி அபகரித்தல், குற்றமுறையான தடுத்துவைப்பு, காயமேற்படுத்தல் போன்றன.) உளவியல் ரீதியிலான வன்முறைகள் என்பன வீட்டில் அல்லது வீட்டிற்கு வெளியில் பாதிக்கப்பட்ட நபருக்கும் தாக்கும் நபருக்கும் இடையிலான உறவு முறை காரணமாக மேற்கொள்ளப்படுபவை என அதன் பிரிவு 23 இல் ஏற்பாடு செய்கின்றது.

  இங்கு உளவியல் ரீதியிலான வன்முறை எனும் போது பாதிக்கப்பட்ட நபருக்கெதிராக மேற்கொள்ளப்படும் மனிதாபிமானமற்ற, கொடூரமான, கீழ்த்தரமான, பாரதூரமான செயற்பாடுகள் எனக் குறிப்பிடப்படுகின்றது.



GAFSO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4.வீட்டு வன்முறையினால் பாதிக்கப்பட்டவர் தனது பாதுகாப்புக்காக எதனை நாடலாம்?**

- இத்தகைய வன்முறைகள் ஒரு நபருக்கெதிராக மேற்கொள்ளப்படுகையில் அந்நபர் குறித்த நியாயாதிக்கமுள்ள நீதவான் நீதிமன்றத்தை நாடி பாதுகாப்புக் கட்டளையை (Protection order) பெற்றுக் கொள்ள முடியும். இத்தகைய பாதுகாப்புக் கட்டளைகளானது குற்றவியல் சட்டத்தில் இல்லாத ஒரு ஏற்பாடாகும்.

- ஒரு நபருக்கெதிராக வீட்டு வன்முறை மேற்கொள்ளப்படுகையில் அல்லது மேற்கொள்ளப்படும் சாத்தியம் நிலவுகையில் அந்த நபர் அதனைத் தடுப்பதற்கான பாதுகாப்புக் கட்டளையை நீதவான் நீதிமன்றில் பெற்றுக் கொள்ளலாம். (1) இங்கு அக்கட்டளையைப் பெறுவதற்கான விண்ணப்பமானது பாதிக்கப்பட்ட நபரால் அல்லது பாதிக்கப்பட்ட நபர் சிறுவராக இருக்கையில் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது பிள்ளை எந்த நபருடன் வசிக்கின்றாறோ அந்த நபர் அல்லது சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட நபர் அல்லது பாதிக்கப்பட்ட நபர் சார்பில் பொலிஸ் உத்தியோகத்தரினரால் செய்யப்பட முடியும்.

**5.இச் சட்டத்தின் பிரகாரம் பாதுகாப்புக் கட்டளையை யார் யார் பெற்றுக் கொள்ள முடியும்?**

- இங்கு குறிப்பிட்டுக் காட்ட வேண்டிய விஷேட அம்சம் என்னவெனில் இச்சட்டத்தின் பிரகாரம் பாதுகாப்புக் கட்டளையை பெண்கள் மட்டுமே பெற முடியும் என்றில்லை. பாதிக்கப்பட்ட நபராக ஆண்கள் மற்றும் சிறுவர்களாக இருக்க முடியும். அதாவது கணவனால், தகப்பனால், சகோதரனால் தனது பாட்டனால், மகனால் அல்லது ஆண் உறவினர்களால் பாதிப்புக்குள்ளாகும் பெண்கள் நீதிமன்றத்தை நாடி பாதுகாப்புக் கட்டளையை குறித்த நபர்களுக்கெதிராகப் பெற்றுக் கொள்ளவும் அதேவேளை தனது மனைவியால், தாயினால், பாட்டியினால், சகோதரிகளினால், பிள்ளைகளால் அல்லது தனது பெண் உறவினர்களால் மேற்குறிப்பிட்ட வகையில் நெருக்கடிக்குள்ளாகும் ஆண்களும் அத்தகைய நபர்களுக்கெதிராகப் பாதுகாப்புக் கட்டளையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- வீட்டு வன்முறைச் சட்டத்தின்படியான விண்ணப்பமானது பாதிக்கப்பட்ட நபர் அல்லது பாதிப்பை உண்டு பண்ணும் நபர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக வசிக்கும் இடத்தின் நியாயாதிக்கத்திற்குரித்தான நீதவான் நீதிமன்றத்திற்கு அல்லது குறித்த வீட்டு வன்முறை நடைபெற்ற அல்லது நடைபெறப்போகும் இடத்திலுள்ள நியாயாதிக்கத்திற்குரிய நீதிமன்றிற்கு செய்யப்பட முடியும்.

6 .பாதிக்கப்பட்டவர் பொலிஸில் முறைப்பாடு செய்ய வேண்டுமா?

- பாதுகாப்புக் கட்டளையைப் பெறுவதற்கான விண்ணப்பத்தை நீதிமன்றிற்குச் செய்வதற்கு முன் பொலிஸிற்கு முறைப்பாடு செய்ய வேண்டும் எனும் தேவைப்பாடு இல்லை. இருப்பினும் குற்றத்தின் பாரதூரத் தன்மையைப் பொறுத்து பொலிஸிற்கு முறைப்பாடு செய்வது பாதிக்கப்பட்டவருக்கு ஒரு பாதுகாப்பாக இருக்க முடியும். பொலிஸிற்கு முறைப்பாடு செய்வதானது பாதுகாப்புக் கட்டளை பெறுவதினின்றும் பாதிக்கப்பட்டவரைத் தடுக்காது.

7 .இடைக்காலப் பாதுகாப்புக் கட்டளையொன்று எவ்வாறான சந்தர்ப்பத்தில் வழங்கப்படும்?

- பாதுகாப்புக் கட்டளைகளுக்கான விண்ணப்பம் செய்யப்பட்ட பின்பு நீதவான் அவ்விண்ணப்பத்தைக் கவனத்தில் எடுத்து அவசியம் எனக் கருதும் பட்சத்தில் விசாரணை செய்ய முடியும் வரைக்குமாக இடைக்காலப் பாதுகாப்புக் கட்டளையொன்றை வழங்க முடியும். அவ்வாறான பாதுகாப்புக் கட்டளையானது குறித்த வீட்டு வன்முறையைத் தடுப்பதற்கான அவசியத்தையும் பாதிக்கப்பட்ட நபரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான அவசியத்தையும் கருத்தில் கொண்டு வழங்கப்படலாம். இடைக்காலப் பாதுகாப்புக் கட்டளையை வழங்கியதன் பின்பு வழக்கினை விளங்குவதற்கு அன்றிலிருந்து 14 நாட்களுக்குள்ளாக திகதி குறிக்கப்படலாம். ஆனால் இடைக்காலக் கட்டளை அவசியமில்லை என நீதிமன்றம் கருதினால் நேரடியாகவே விசாரணைக்காக வழக்கு நியமிக்கப்படலாம். இடைக்காலப் பாதுகாப்புக் கட்டளையும் பாதிக்கப்பட்ட நபரை அவசியப்படின் சத்தியத்தின் மீது விசாரணை செய்த பின்பு வழங்கப்படக் கூடும். 14 நாட்களுக்குள்ளாக பிரதிவாதி நீதிமன்றில் தோன்றி ஏன் அவருக்கெதிராக பாதுகாப்புக் கட்டளை வழங்கக் கூடாது. என்பதற்குக் காரணம் காட்ட வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 .இக் கட்டளை எக் காலம் வரை அமுலில் இருக்கும்?

- இடைக்காலக் கட்டளையானது பிரதிவாதியைக் குறித்த வீட்டு வன்முறையைப் புரிவதினின்றும் தடுப்பதுடன் நீதிமன்றம் குறிப்பிடும் வேறு தடையுத்தரவுகளையும் கொண்டிருக்கும். இக்கட்டளையானது பாதுகாப்புக் கட்டளை நீதிமன்றத்தினால் வழங்கப்படும் வரை அல்லது இடைக்காலக் கட்டளை நீதிமன்றத்தினால் அகற்றப்படும் வரைக்கும் அமுலிலிருக்கும்.

9 .இச் சட்டத்தில் காணப்படும் நன்மை என்ன?

- இச்சட்டமானது வீட்டு வன்முறைகளைத் தடுப்பதற்கான ஒரு ஆயுதமாகக் கொண்டு வரப்பட்ட போதிலும் குடும்ப ஒற்றுமையையும் குடும்ப சமாதானத்தையும் சீர்ப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதாவது இடைக்காலக் கட்டளை வழங்கியதன் பின்பு நீதிமன்றமானது குறிப்பிட்ட திறத்தவர்களை குடும்ப ஆலோசகரிடம் அல்லது சமூக சேவை உத்தியோகத்தரிடம் ஆற்றுப்படுத்தி அவர்களுக்கு ஆலோசனை வழங்குமாறு கட்டளையிடும். அத்துடன் திறத்தவர்களை அத்தகைய நிகழ்வுகளில் பங்கெடுக்குமாறு கட்டளையிட முடியும். அத்துடன் நீதிமன்றம் அவசியமெனக் கருதினால் இடைக்காலக் கட்டளை உரிய முறையில் அமுல்ப்படுத்தப்படுகின்றதா என அவதானித்து நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு குடும்ப ஆலோசகரை அல்லது சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தரை பணிக்க முடியும்.

10 .இந்த வழக்கின் விசாரணை முறை எவ்வாறு இருக்கும்?

- இச்சட்டத்தின் படி பாதுகாப்புக் கட்டளையை வழங்குவதற்கான விசாரணை சற்று வித்தியாசமானது. பிரதிவாதியானவர் சட்டத்தரணி மூலம் நீதிமன்றத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தாதவிடத்து பாதிக்கப்பட்டவர் கோரினால் அல்லது நீதிமன்றம் தானாகவே சாட்சிகளையும் பாதிக்கப்பட்டவரையும் பிரதிவாதி விசாரணை செய்வதைத் தடுக்க முடியும் அல்லது பிரதிவாதி தான் கேட்க வேண்டிய வினாக்களை நீதிமன்றதிடம் கூற நீதிமன்றம் அக்கேள்விகளை உரிய சாட்சிகளிடம் வினவ முடியும். இத்தகைய ஏற்பாடானது நேரடியான குறுக்கு விசாரணை மூலம் பிரதிவாதி மற்றைய தரப்பினரை அச்சுறுத்துவதினின்றும் தடுக்கின்றது. ஆனால் பிரதிவாதி சட்டத்தரணி மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுகையில் வழமையான விதத்தில் விசாரணை நடை பெறும். பிரதிவாதி மன்றில் சமூகமளிக்காத விடத்தும் பிரதிவாதிக்கு அறிவித்தல் கிடைத்துள்ளது என நீதிமன்றம் திருப்திப்பட்டால் கிடைக்கப் பெற்ற சாட்சியங்களைக் கொண்டு கட்டளையை ஆக்கும்.

- விசாரணைகளின் பின்பு நீதிமன்றம் திருப்திப்படுமிடத்து பாதுகாப்புக் கட்டளை வழங்கப்படும். அப்பாதுகாப்புக் கட்டளையின் காலமானது நீதிமன்றினால் தீர்மானிக்கப்படும். இருப்பினும் ஆகக் கூடியதாக 12 மாத காலப் பகுதிக்கே அக்கட்டளை ஆக்கப்படலாம். அக்காலப் பகுதியினுள் அக்கட்டளையானது திறத்தவர்கள் விண்ணப்பிக்கும் போது நீடிக்கப்படலாம்.

- பாதுகாப்புக் கட்டளையானது வழங்கப்படுகையில் பிரதிவாதியின் குற்றத் தன்மை நிரூபிக்கப்பட வேண்டும் அல்லது குற்றத்தை பிரதிவாதி ஒத்துக் கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை. பிரதிவாதி குற்றத்தை ஒத்துக் கொள்ளாத போதிலும் பாதுகாப்புக் கட்டளை வழங்குவதை எதிர்க்காதவிடத்து அவருக்கெதிராகப் பாதுகாப்புக் கட்டளை வழங்கப்பட முடியும். மேற்கூறப்பட்ட கட்டளையானது பிரதிவாதிக்கு அனுப்பப்படுவதுடன் அக்கட்டளையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி பிரதிவாதியும் பாதிக்கப்பட்ட நபரும் வசிக்கின்ற பிரதேச நிலையப் பொறுப்பதிகாரிக்கும் அனுப்பப்பட வேண்டும். அதாவது அக்கட்டளையானது அமுல்படுத்தப்படுகின்றதா என்பதை அவதானிக்கும் கடமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு உரித்தாக்கப்படுகின்றது.

11.வீட்டு வன்முறைகள் தடுப்புச் சட்டத்திற்கு அமைவாக வழங்கப்படும் பாதுகாப்புக் கட்டளையானது எவ்வாறான தடையுத்தரவினை கொண்டிருக்கும்?

பிரதிவாதிக்கெதிராக பின்வரும் தடையுத்தரவுகளைக் கொண்டிருக்க முடியும்.

1. பாதிக்கப்பட்ட நபரும் பிரதிவாதியும் வசிக்கின்ற வீட்டினுள் அல்லது அதன் பகுதியினுள் பிரவேசிப்பதைத் தடை செய்தல்.

2. பாதிக்கப்பட்டவரின் வீட்டிற்கு அல்லது வேலைத் தளத்திற்கு அல்லது பாடசாலைக்கு செல்வதைத் தடை செய்தல்.

3. பாதிக்கப்பட்ட நபர் தற்காலிகமாக வசிக்கும் வசிப்பிடத்திதற்குச் செல்வதைத் தடை செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இருவரும் வசித்த வீட்டில் வசிப்பதைத் தடை செய்தல்.

5. பிள்ளையின் சிறந்த நலன் எனக் கருதி நீதிமன்றம் அனுமதித்தால் தவிர பாதிக்கப்பட்டவரின் பிள்ளைகளுடன் எவ்விதத் தொடர்பையும் கொண்டிருப்பதைத் தடை செய்தல்.

6. பிரதிவாதியும் பாதிக்கப்பட்டவரும் வழமையாகப் பாவித்து வந்த அசையும் அசையா ஆதனங்களைப் பாவிப்பதைத் தடை செய்தல்.

7. பாதிக்கப்பட்ட நபரை இக்கட்டான நிலமைக்கு இட்டுச் செல்லும் வகையில் திருமண இல்லத்தை கையுதிர்த்தல், கைமாற்றுதல் அல்லது விற்பனை செய்தல் போன்றவற்றிலிருந்தும் தடை செய்தல். இருப்பினும் இத்தகைய தடையுத்தரவுகளை வழங்குகின்ற போதிலும் நீதிமன்றம் பாதிக்கப்பட்ட நபரினதும் பிள்ளைகளதும் பிரதிவாதியின் பிள்ளைகளதும் வதிவிடத் தேவைகளையும் கருத்திற் கொண்டே கட்டளையாக்கும். அத்துடன் இப்பாதுகாப்புக் கட்டளையினால் பிரதிவாதிக்கு அல்லது வேறு ஒரு நபருக்கு ஏற்படக் கூடிய சங்கடங்களையும் கஷ்டமான நிலமைகளும் கவனத்திலெடுக்கப்படும்.

12.இச் சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவருக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது?

- வீட்டு வன்முறைச் சட்டதின் படியான பாதுகாப்புக் கட்டளை வழங்கப்படுகையில் நீதிமன்றமானது பாதிக்கப்பட்டவரின் உடனடியான பாதுகாப்பு, சுகாதார நலனைக் கவனத்திலெடுத்து பிரதிவாதியிடமிருக்கும் ஆயதங்களைக் கைப்பற்றுமாறு பொலிஸாருக்குக் கட்டளையொன்றை விடலாம். அத்துடன் பாதிக்கப்பட்ட நபரதும், பிள்ளைகளதும் தனிப்பட்ட உடமைகளை பெற்றுக் கொள்ளும் முகமாக அவர்களைக் கூட்டிச் செல்லுமாறு பொலிஸாரைப் பணிக்க முடியும். இக்கட்டளைகளுக்கு மேலதிகமாகப் பாதிக்கப்பட்ட நபரையும், பிரதிவாரியையும் குடும்ப நல ஆலோசனை பெறுவதற்கு அல்லது புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு, பாதிக்கப்பட்டவர் கோரினால் அவரை இரகசியமான தற்காலிகத் தங்குமிடத்தில் தங்க வைத்தல் போன்றவற்றிற்கு ஏதுவான கட்டளைகளையும் நீதிமன்றம் விடுக்க முடியும். இத்தகைய ஏற்பாடுகள் பாதிக்கப்பட்டவர் மேலும் பாதிக்கப்படாமல் தடுக்கும் நடவடிக்கைகளாகவே அமைந்துள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இச்சட்டத்தின் பிரகாரமான பாதிக்கப்பட்ட நபர் பிரதிவாதியில் தங்கி வாழும் நபராக இருக்கின்ற போது பிரதிவாதியானவர் பண உதவி செய்ய வேண்டிய கடப்பாடு பாதுகாப்புக் கட்டளையின் மூலம் ஏற்படுத்தப்படுகின்றது. இருப்பினும் இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கேற்ப திறத்தவரும் நீதிமன்றினால் விசாரிக்கப்பட்டும், பிரதிவாதியின் நிதி நிலமை கவனத்திற் கொள்ளப்பட்டுமே கட்டளையாக்கப்படும். இந்த பண உதவிக்கான கட்டளையானது எந்தவொரு நபரும் தாபரிப்புக் கோரி நீதிமன்றிற்கு விண்ணப்பம் செய்யும் உரிமையைத் தடுக்காது.

13.வீட்டு வன்முறைப் பாதுகாப்புக் கட்டளையுடன் திருப்திப்படாதவர் மேன்முறையீடு செய்ய முடியுமா?

- வீட்டு வன்முறைப் பாதுகாப்புக் கட்டளையுடன் திருப்திப்படாத எந்தவொரு நபரும் அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்புரை 154 யின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றங்களுக்கு மேன் முறையீடு செய்ய முடியும். 15 அத்துடன் பாதிக்கப்பட்ட நபருக்குள்ள வேறு வழக்கிடும் உரிமைகளையும் இக்கட்டளை தடை செய்யாது. (அதாவது வழக்கிடுதல் விவாகரத்து வழக்கு போன்றன)

14.இவ் வழக்கின் நிகழ்வுகளை பிரசுரிப்பது எவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளது?

- பாதுகாப்புக் கட்டளையைப் பெற்றுக் கொள்வதற்கான திறத்தவர்களின் பெயர்களையோ அல்லது வேறு விடயங்களையோ அல்லது அடையாளங்களைப் பிரசுரிப்பது அல்லது வழக்கு நடவடிக்கை விபரங்களைப் பிரசுரிப்பது இரு வருட காலத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனைக்குரிய குற்றமாகும். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இவ்வேற்பாடும் எமது சமூக, கலாச்சார விழுமியங்களைப் பாதுகாப்பதற்கானதாகவே உள்ளது என்று கூற முடியும்.

15.பாதுகாப்புக் கட்டளையை ஏற்று பிரதிவாதி இயங்காத விடத்து அவருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்ன?

- இச்சட்டத்தின் கட்டளையை அமுல்படுத்துவதை உறுதிப்படுத்துபவர்களாக சமூக சேவைப் பணியாளர்கள், குடும்ப நல ஆலோசகர்கள், சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்கள், குடும்ப சுகாதாரப் பணியாளர்கள் போன்றோர் உள்ளனர். அவர்களில் ஒருவருக்கு நீதிமன்றம் பணிக்குமிடத்து பாதிக்கப்பட்ட நபருக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிவாதிக்கும் இடையில் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புக் கட்டளையின் அமுல்படுத்துகையை அவதானித்து மூன்று மாதத்திற்கொரு தடவை நீதிமன்றிற்கு அறிக்கை செய்ய வேண்டும். பாதுகாப்புக் கட்டளையை ஏற்று பிரதிவாதி இயங்காத விடத்து அவர் குற்றஞ்சாட்டப்பட்டு நீதவான் நீதிமன்ற விசாரணைகளின் பின்னர் ஒரு வருடத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனைக்கு அல்லது பத்தாயிரம் ரூபாவிற்கு மேற்படாத தண்டப் பணம் அல்லது இரு தண்டனைகளையும் அனுபவிக்க வேண்டி ஏற்படலாம்.

பொதுவாக இச்சட்டத்தை எடுத்து நோக்குகின்ற போது வீட்டு வன்முறைகளைத் தடுப்பதற்கான ஒரு காப்பாகவே இதனை அவதானிக்க முடிகின்றது. இருப்பினும் இச்சட்டத்தினை வீட்டு வன்முறைகளை தடுப்பதற்கான பாரியதொரு உபகரணமாகக் கொள்ள முடியாது. ஏனெனில் நமது நாட்டைப் பொறுத்தவரை குடும்பக் கட்டமைப்பு மிகவும் அவசியமான ஒன்றாக இருக்கின்றது. எனவே சிறுசிறு விடயங்களுக்கெல்லாம் பாதுகாப்புக் கட்டளையை நாடுகின்ற போது அங்கு பாரிய சீரழிவுகள் நடைபெற இடமுண்டு. ஆகையினால் பாரிய வன்முறைகளைத் தடுப்பதற்கான ஒரு கருவியாக இதனை உபயோகிப்பது சாலச் சிறந்தது.

| | | |
|---|---|---|
| 1 | பிரிவு | 2 (1) |
| 2 | பிரிவு | 2 (2) |
| 3 | பிரிவு | 2 (3) |
| 4 | பிரிவு | 4 (1) (a) |
| 5 | பிரிவு | 4 (2) |
| 6 | பிரிவு | 5 (1) (a), (b) |
| 7 | பிரிவு | 5 (2) |
| 8 | பிரிவு | 6 (2) (a), (b) |
| 9 | பிரிவு | 10 (2) |
| 10 | பிரிவு | 6 (4) |
| 11 | பிரிவு | 9 |
| 12 | பிரிவு | 11 |
| 13 | பிரிவு | 12 (1) |
| 14 | பிரிவு | 12 (1) |
| 15 | பிரிவு | 17 |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாறை மாவட்டத்தில் பெண்களின் சேவைகள் சம்பந்தமாக தெரிந்து கொள்வதற்காக ...

| | |
|---|---|
| GAFSO அலுவலக தொலைபேசி இல : | 0672261230 |
| GAFSO துரித இல : | 0770256440 |
| மின்னஞ்சல் | info@gafso.org |
| | www.gafso.org |

## தேசிய பெண்கள், சிறுவர்கள் சேவை சம்பந்தமான பொதுவான தொலைபேசி இலக்கங்கள

| | |
|---|---|
| பெண்கள் உதவி | 1938 |
| சிறுவர் உதவி | 1929 |
| மகளிர் அமைச்சு | 0112186055 |
| மின்னஞ்சல் | secycdwa@gmail.com |
| அரச தகவல்கள் மையம் | 1919 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் பற்றி



உலகம் தோன்றிய காலம் முதல் மனிதர்களுக்கிடையிலான முரண்பாடு, வன்முறை. இன்று வரை நடைபெற்ற வண்ணமே உள்ளது. அது நாகரீகம் அடைந்து வரும் நிலையில் மனிதர்களுக்கு தேவையான சட்டங்களும் அதற்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. சட்டங்கள் பொதுவாக சிவில் சட்டம் மற்றும் குற்றவியல் சட்டம் என இரு பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது இவ்வாறான சட்ட திட்டங்கள் மனிதர்களுடைய பிணக்குகளை தீர்க்கும் வகையில் அமைந்திருந்த போதிலும் அவை தொடர்பான அறிவினை பொது மக்கள் பெற்றிருப்பது மிகக்குறைவாக காணப்படுகின்றது.

அதிலும் குறிப்பாக பெண்களுக்கெதிராக நடாத்தப்படும் வன்முறைகள் சம்பந்தமான சட்ட திட்டங்களை எம் மத்தியிலுள்ள மக்கள் அறிந்திருப்பது மிக குறைவாக காணப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் இதனை முடியுமான வரை மக்கள் மயப்படுத்துவது இக்காலப்பகுதியில் மிக அத்தியாவசியமான ஒரு விடயமாகும்.

அந்த வகையில் இதற்காக அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், மற்றும் பொதுமக்கள் முன்வர வேண்டிய தேவை நமக்கு எழுந்துள்ளது. இதனை கருத்திற்கொண்டு GAFSO நிறுவனமானது மக்கள் அறிந்திருக்க வேண்டிய வீட்டு வன்முறை மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறை சம்பந்தப்பட்ட அடிப்படை சட்டங்களை ஒரு நூலாக தொகுத்துள்ளது. இந் நூலுக்கான உள்ளீட்டை வழங்கிய சட்டத்தரணி N.M.அப்துல் முஜீப் LLB, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர ஜெனித்தா மற்றும் இதற்காக உழைத்த அனைவருக்கும் நாம் நன்றியை தெரிவித்து கொள்கின்றோம். மேலும் இவ்வாறான பயன்தரக்கூடிய விடயங்களை துறைசார் வல்லுனர்கள் வெளியீடுவது காலத்தின் தேவையாகும்.

திரு. A.J. காமில் இம்டாட்
திட்டப் பணிப்பாளர், GAFSO.

# இல்லத்து வழக்காடு

www.gafso.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org